**கவனிக்க.**- 07.06.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1815 - 2013 ජූනි මස 14 වැනි සිකුරාදා - 2013.06.14

1815 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 766 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 769 |


**கவனிக்க.**- (i) கலாநிதி மாலினி பொன்சேகா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, மே மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) தகவல் சுதந்திரம் சட்டமூலம் 2011, மே மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூன் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, ஆடி மாதம் 14 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, வைகாசி 23.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | ரம்பேவா | கல்லான்சிய பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம்பலாத்த பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அநுராதபுரம் |

6-252

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, ஆடி மாதம் 14 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, வைகாசி 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | நுவரகம்பலாத்த கிழக்கு | அநுராதபுர புதிய நகரப் பகுதியில் நுவரகம்பலாத்த பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அநுராதபுரம் |

6-309

---

## நீதி அமைச்சு

வரவேற்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

நீதி அமைச்சில் வெற்றிடமாகியுள்ள 02 வரவேற்பாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி உட்பட 04 பாடங்களில் ஆகக்குறைந்த பட்சம் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆகக்குறைந்த பட்சம் ஒரு பாடத்திலாவது (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

2. **அனுபவம்**.- அரச அல்லது தனியார் நிறுவனம் ஒன்றில் வரவேற்பாளராக 06 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சேவை செய்திருத்தல்.

3. **உடல்சார் தகைமைகள்**.- எல்லா விண்ணப்பதாரர்களும் தீவின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கும் பதவிக்கு உரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல்சார் மற்றும் உளசார் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

4. **பிற தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சிறந்த குண இயல்பைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவையான மேலே குறிப்பிட்ட (1 முதல் 4 வரை) தகைமைகளை விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று எல்லாவிதத்திலும்

பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சைச் சான்றிதழ்களின் பிரதிகளையும் வயதை உறுதிப்படுத்துவதற்காக பிறப்புச் சான்றிதழின் பிரதி யொன்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றும் விண்ணப் பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். உரிய சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்ப தாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

6. **சம்பள அளவுத்திட்டம்**.- (எம்என்-1-2006 (ஏ)
மாதாந்தம் ரூபா 13,120-10x145-11x170-10x240-10x320- ரூபா 22,040.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்.

8. **கடமையின் தன்மை**.- அமைச்சுக்கு வருகை தருகின்ற ஆட்களை மரியாதையுடன் வரவேற்று முறையான வழிகாட்டலுடன் உரிய பிரிவுகளுக்கு அனுப்புதல் மற்றும் அவர்களுக்கு நட்புடன் கூடிய திருப்திகரமான சேவையை வழங்கலும் நீதி அமைச்சின் செயலாள ரினால் ஒப்படைக்கப்படும் ஏனைய பணிகளை நிறைவேற்றலும்.

9. **சேவை நிபந்தனைகள்**.- இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை வழங்குதல் வேண்டும்.

10. இந்த அறிவித்தலின் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக தயார்செய்யப்பட்ட விண்ணப்பங்களை சரியாகப் பூர்த்திசெய்து 2013.07.12 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நீதி அமைச்சின் வரவேற்பாளர் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப் பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

11. அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் முறை :

| பரீட்சித்துப் பார்த்து புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. மொழித் தேர்ச்சி | 25 |
| 3. கணனி அறிவு | 15 |
| 4. மேலதிக அனுபவம் | 30 |
| 5. நேர்முகப் பரீட்சையின்போது காட்டப்பட்ட திறமை | 05 |
| மொத்தம் | 100 |

**குறிப்பு**.- அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களிலிருந்து திறமை அடிப்படையில் உளதாம் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பத்தைச் சரியாகப் பூர்த்திசெய்ய வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அல்லது அது சம்பந்தப்பட்ட கடிதங்கள் தபாலில் காணாமற் போனதாக செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

13. எவரேனுமொரு விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தில் பொய்யான தகவல்கள் உள்ளதன் காரணமாக அவரைத் தகுதியற்ற வராக்குவதற்கும் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் இடமுண்டு.

இங்கே குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராவார்.

கமலினீ டீ சில்வா,
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
23.05.2013.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி அமைச்சின் வரவேற்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு**

இல. : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. முழுப்பெயர் :
சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :
சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

3. சொந்த முகவரி :
சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

4. பிறந்த திகதி :

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் வயது :
வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

7. ஆணா/பெண்ணா என்பது :----.

8. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

9. தொலைபேசி இலக்கம் :----.

10. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.) பரீட்சை :
வருடம் :
சுட்டிலக்கம் :

| பாடம் | சித்தி |
|---|---|
| | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :
வருடம் :
சுட்டிலக்கம் :

| பாடம் | சித்தி |
|---|---|
| | |

11. அனுபவம் :----.
(விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள வாறு)

12. பிற தகைமைகள் :

13. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதில் அடங்கிய தகவல்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவையென தெரிவுசெய்யப் படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகுதியற்ற வனாவேன் எனவும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரிய வருமிடத்து எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப் படுவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .......................................... என்பவர் தற்போது இவ்வமைச்சில்/திணைக்களத்தில் .................... ......................................... பதவியில் சேவை செய்கின்றார் என்றும் சொந்தக் கோவையின்படி அவரால் மேலே தரப்பட்டுள்ள எல்லாத் தகவல்களும் உண்மையானவை என்றும் இவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன/மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் மேற்குறித்த பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் அறிவிக்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

6-249

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரச கரும மொழிகள் திணைக்களம்

*அரச கரும மொழிகள் திணைக்களத்தின் மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2013*

அரச கரும மொழிகள் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) | - | 03 பதவிகள் |
| மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) | - | 04 பதவிகள் |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | - | 06 பதவிகள் |

2. அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகள் மூலம் பொது நேர்முகப் பரீட்சையொன்றினால் தகைமை பரிசீலிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

3. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 17,680-10 x 320-11 x 365-15 x 450- ரூபா 31,645 (எம்என்-6-2006(ஏ))

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

5. **தகைமைகள்**.- மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு பின்வரும் தகைமைகள் பொருத்தமானதாகும்.

5.1 கல்வித் தகைமைகள்.- **மொழிபெயர்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)** :

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்கள மொழியோ அல்லது ஆங்கில மொழியோ அல்லது ஒரு பாடமாக சித்தியடைந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் அல்லது பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

*அல்லது*

(ii) பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்

*அல்லது*

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மொழிபெயர்ப்பு முறைகளை ஒரு பாடமாகச் சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

*மற்றும்*

(i) க. பொத. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

*அல்லது*

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்தது சாதாரணக சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழியில் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

*அல்லது*

(3) இலங்கை கீழைத்தேய மொழி ஊக்குவிப்புச் சங்கத்தில் இறுதி (பண்டிதர்) பட்டம் பெற்றிருத்தல்

*மற்றும்*

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

*அல்லது*

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

**மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) :**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழி ஒரு பாடமாக சித்தியடைந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

*மற்றும்*

(i) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் அல்லது பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

*அல்லது*

(ii) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்

*அல்லது*

*(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மொழிபெயர்ப்பு முறைகளை ஒரு பாடமாகச் சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்*

*மற்றும்*

(i) *க. பொத. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

(ii) *க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்*

**மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) :**

*(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் மொழி அல்லது சிங்கள மொழி அல்லது ஒரு பாடமாக சித்தியடைந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்*

*மற்றும்*

(i) *பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம் மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

(ii) *பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

*(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மொழிபெயர்ப்பு முறைகளை ஒரு பாடமாகச் சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்*

*மற்றும்*

(i) *க. பொத. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/சிங்கள இலக்கியத்திற்கு சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

(ii) *க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழியில் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

*(3) இலங்கை கீழைத்தேய மொழி ஊக்குவிப்புச் சங்கத்தில் இறுதி (பண்டிதர்) பட்டம் பெற்றிருத்தல்*

*மற்றும்*

(i) *க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

(ii) *க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்*

5.2 உடல்சார் தகைமைகள்.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு போதிய உடல் மற்றும் உளத் தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.

5.3 ஏனையவை :

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(2) விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கத்தை உடையவராய் இருத்தல் வேண்டும்.
(3) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பப்படிவம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு சகல வழிகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- (i) நியமிக்கப்படும் எண்ணிக்கையும் பதவி நடைமுறைப்படுத்தும் திகதியும் அரச கரும மொழிகள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களின் எண்ணிக்கையையோ சகல வெற்றிடங்களையோ நிரப்பும் அதிகாரம் அரச கரும மொழிகள் ஆணையாளருக்கு உண்டு.

(ii) பதவிக்கு நியமனம் பெற்று 03 வருடங்கள் கடப்பதற்கு முன் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) நியமனம் பெற்று 05 வருடங்கள் கழிவதற்கு முன் அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் பிரகாரம் மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளை நியமித்தல்.- அரச சேவைகள் ஆணைக்குழுவின் 1586/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியினால் வெளியிடப்பட்ட பணி நடைமுறை ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் அமைய பதவியில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(v) அனைத்து ஆட்சேர்ப்புகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைக்கும் எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்படல் வேண்டும்.

(vi) அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/நிர்வாக தலைவரின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. **வயதெல்லை**.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 21 வயதிற்கு குறையாமல் இருப்பதோடு 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

8. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

8.1 எழுத்துப் பரீட்சை 2013, யூலை மாத இறுதியில் கொழும்பில் மட்டும் நடாத்தப்படும்.
8.2 பரீட்சைக்குரிய பாடங்கள் :

| | வினாப்பத்திரம் | காலம் | மொத்த புள்ளிகள் | சித்தியடைய தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு- சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு- ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. சிங்கள மொழி | 1 1/2 மணித்தியாலயம் | 100 | 40% |
| | ஆங்கில மொழி | 1 1/2 மணித்தியாலயம் | 100 | 40% |
| மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு- தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு- ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. தமிழ் மொழி | 1 1/2 மணித்தியாலயம் | 100 | 40% |
| | ஆங்கில மொழி | 1 1/2 மணித்தியாலயம் | 100 | 40% |

| | வினாப்பத்திரம் | காலம் | மொத்த புள்ளிகள் | சித்தியடைய தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு- சிங்களத்திலிருந்து தமிழுக்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு- தமிழிலிருந்து சிங்களத்திற்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. சிங்கள மொழி | 1 1/2 மணித்தியாலயம் | 100 | 40% |
| | தமிழ் மொழி | 1 1/2 மணித்தியாலயம் | 100 | 40% |

8.3 பாடப்பரப்பு :

| | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|---|
| மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு.- சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு.- ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 3. சிங்கள மொழி | கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலிருந்து இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக்கூட்டல் |
| | 4. ஆங்கில மொழி | கட்டுரை எழுதுதல், தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், பேச்சு வழக்குகளை விளக்குதல், கூட்டு மற்றும் தனி வாக்கியங்களை விளக்குதல் |
| மொழி பெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு.- தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு.- ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 3. தமிழ் மொழி | கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலிருந்து இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக்கூட்டல் |
| | 4. ஆங்கில மொழி | கட்டுரை எழுதுதல், தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், பேச்சு வழக்குகளை விளக்குதல், கூட்டு மற்றும் தனி வாக்கியங்களை விளக்குதல் |

| | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|---|
| மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு.- சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு.- தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 3. சிங்கள மொழி | கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலிருந்து இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக்கூட்டல் |
| | 4. தமிழ் மொழி | கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலிருந்து இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக்கூட்டல் |

9. **போலியான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்யும்போது கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய விண்ணப்பதாரி ஒருவர் பொருத்தமற்றவர் என்பது தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவரை அரச சேவையிலிருந்தே நீக்க முடியும். அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அரச கரும மொழிகள் ஆணையாளரால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்ற அங்கீகாரமாகக் கருதலாகாது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணையாளரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கீழ்ப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுபவர்கள் அரச கரும மொழிகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

10. இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதங்களுக்கிடையில் ஏதாவது உடன்பாடோ அல்லது வேறுபாடோ ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழிப் பதங்களே மேலோங்கி இருத்தல் வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 300 ரூபாவாகும். இத்தொகை அரச கரும மொழிகள் ஆணையாளரின் வருமானத் தலைப்பு 2003-99-00 கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்த முடியும். அதற்காக வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு பற்றுச்சீட்டை ஒட்டுதல் வேண்டும். (அதன் பிரதியை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமானதாகும்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

12. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்யும்போது கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய விண்ணப்பதாரி ஒருவர் பொருத்தமற்றவர் என்பது தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சைத் தகைமையை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவரை அரச சேவையில் இருந்து நீக்க முடியும்.

13. விண்ணப்பப்படிவத்தை ஏ4 (24x29cm) அளவிலான தாளைப் பயன்படுத்தி,

13.1 தொடர் இலக்கம் 1 முதல் 34 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும்

13.2 தொடர் இலக்கம் நான்கிலிருந்து அடுத்த பக்கங்களில் உள்ளடக்கப்படுமாறு விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

13.3 விண்ணப்பப்படிவம் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். குறித்த தகவல்களை தமது கையெழுத்திலேயே தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

13.4 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2013" எனக் குறிப்பிடவும்.

13.5 சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2013.06.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

அரச கரும மொழிகள் ஆணையாளர்,
அரச கரும மொழிகள் திணைக்களம்,
இல. 341/7, "பாஷா மந்திரய",
இராஜகிரிய

13.6 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரினால், சமாதான நீதவானால், சத்தியப்பிரமாணம் செய்த ஆணையாளரினால், பிரசித்த நொத்தாரிசால், முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால், வருடாந்த சம்பளம் 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச பதவியிலுள்ள உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

13.7 தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை உரிய திணைக்கள/நிறுவனத் தலைவர் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

14. விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் அரச கரும மொழிகள் ஆணையாளரே தீர்மானிப்பார். விண்ணப்பதாரர்கள் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பொது சட்டதிட்டங்களின் பிரகாரம் செயலாற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

16. விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குதலை, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதாக கருதுதல் கூடாது.

ஜே. டீ. சீ. ஜயசிங்க,
அரச கரும மொழிகள் ஆணையாளர்.

அரச கரும மொழிகள் திணைக்களம்,
இல. 341/7, "பாஷா மந்திரய",
கோட்டை வீதி,
இராஜகிரிய.
2013.05.29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிக்கான விண்ணப்பப்படிவம்

Application for the Post of Translator (Sinhala/English), (Tamil/English) & (Tamil/Sinhala)

(அலுவலக பயன்பாட்டுக்காக)

விண்ணப்பிக்கும் பதவி :
(உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்) ☐

1. மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)
2. மொழி பெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)
3. மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)

1. பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | |

2. முகவரி :

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.3 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.4 அனுமதிப்பத்திரங்களை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.5 தொலைபேசி இலக்கம் :----.
2.6 விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
2.7 வசிக்கும் கால எல்லை :----.
2.8 கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

3.

3.1 பால் :
(பெண்-1, ஆண்-0)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 விவாகமானவர்/விவாகமாகாதவர் :
விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

3.4 2013.06.28 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

4. கல்வித் தகைமைகள் :

4.1 (அ) பட்டம் :
(ஆ) பட்டம் பெற்றுக்கொண்ட வருடம் மற்றும் பல்கலைக்கழகம் :
(இ) பட்டம் தொடர்ந்துள்ள பாடங்கள் :

4.2 க. பொ. த. (உ. த.) :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :
(ii) சுட்டிலக்கம் :
(iii) பெறுபேறுகள் :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |

4.3 க. பொ. த. (சா. த.) :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :
(ii) சுட்டிலக்கம் :
(iii) பெறுபேறுகள் :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |

5. நீர் எப்போதேனும் அல்லது ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? : (உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக) :

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில் அது தொடர்பான விபரங்கள் :................................

6. பரீட்சைக் கட்டணம் :
   (i) பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய அலுவலகம் :----.
   (ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.
   (iii) செலுத்திய தொகை :

| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியை தாங்கள் வைத்துக்கொள்ளவும்.) |
|---|

7. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :**

(அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானது எனவும், இந்த ஆட்சேர்ப்புச் செய்யும் பரீட்சையின் நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவர் எனத் தெரியவரும் சந்தர்ப்பத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தும்பொழுது அல்லது அதற்குப் பின்னர் அல்லது எனது பரீட்சைத் தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் நான் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்துள்ள ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

(தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக)
**திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................... ஆந் திகதியிலிருந்து இவ் அலுவலகத்தில் பணியாற்றுகின்றார் எனவும் அவரின் வேலை மற்றும் நடத்தை எப்போதும் திருப்திகரமானது எனவும் மேற்குறிப்பிட்டுள்ள சகல தகவல்களையும் இவ் அலுவலகத்திலுள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நான் தனிப்பட்ட முறையில் பரிசீலித்தேன் எனவும் அவை சரியானவை எனவும் 2013, ............................ ஆம் மாதம் ............................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

6-315

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்ஆன் பாடசாலை
இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2012

(பௌத்த தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குச் சமமானது)

*1.* **ஒழுங்கு விதிகளும் பிரமாணங்களும்.**- மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும், இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளன.

*2.* **பரீட்சை நிலையங்கள்.**- இணைப்பு 02 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

ஆயினும் ஏதாவதொரு நகரப் பரீட்சை நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதபோது குறித்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிலையத்திற்குரிய விண்ணப்பதாரிகள் அண்மையிலுள்ள வேறொரு நகரப் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றச் செய்யப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்களும் நகரங்களும் உள்ளடக்கிய பட்டியல் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

*3.* **ஊடக மொழி.**- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி, தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே தோற்ற முடியும்.

*4.* **தகைமைகள்.**- இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களாயிருத்தல்.

அல்லது

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால், அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தர அல்குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவராயிருத்தல்.

அல்லது

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இஸ்லாம் அல்லது அரபு படத்தில் சித்தியடைந்தவர்களாயிருத்தல்.

**குறிப்பு.**- (1) இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்ப தாரியும், மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(2) பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலை அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது பாடசாலை அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

5. பதிவுசெய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாகள், மத்ரஸா பாடசாலைகள் என்பவற்றிற்கு விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் கிடைக்கப்பெறாத நிறுவனங்கள், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு 2013, யூன் மாதம் 28 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.-

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதோடு, மற்றைய பிரதியினைக் குறிப்பிட்ட நிறுவனத்தில் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2013, யூலை மாதம் 12 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழைகளின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்:-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

(விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.)

5.5 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை 2012" எனவும், பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5.6 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழையும் இணைத்து அனுப்பக்கூடாது. அஹதிய்யாப் பாடசாலையின் அல்லது சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் அல்லது பாடசாலை அதிபர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

6. இப்பரீட்சைக்கு முதற்தடவை தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு கட்டணம் ரூபா 150 ஆகும். நூன சித்தி பெற்ற பரீட்சார்த்திகளுக்கு ஒரு பாடத்திற்கு ரூபா 50 ஆகும்.

6.1 **கட்டணம் செலுத்தும் முறை.**- பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய பரீட்சார்த்திகளுக்கான முழுத்தொகையை இலங்கையின் எந்தவொரு அஞ்சலகத்திலாவது செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பயனுடையது.)

7. **அனுமதி அட்டைகள்**.- பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் உரிய அஹதிய்யா பாடசாலை அதிபர் அல்லது மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபருக்கு விநியோகிக்கப்படும். அதிபரினால் அவ் அனுமதி அட்டைகள் உரிய பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கத் தவறும்பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித் தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற எத்தனிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அஹதிய்யாப் பாடசாலை அதிபர், குர்ஆன் மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர், அரபுக்கல்லூரி அதிபர், வருட மொன்றிற்கு ரூபா 2,40,360 இற்கு மேல் திரட்டிய வருடாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச சேவை உத்தியோகத்தர், மஸ்ஜிதுக்குப் பொறுப்பான இமாம் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு (7) தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, அஹதிய்யாப் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா, பாடசாலை என்பவற்றின் அதிபர்கள் இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் :-----.
(ஆ) அஹதிய்யாப் பாடசாலை/ குர்ஆன் மத்ரஸா/ அரசாங்கப் பாடசாலையின் பெயரும் கணனி இலக்கமும் :-----.
(இ) பரீட்சார்த்தியின் முழுப் பெயரும் விலாசமும் :-----.
(ஈ) பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம் :-----.
(உ) விண்ணப்பத்தை அனுப்பி வைத்த தபால் நிலையம் :- ----.
(ஊ) பதிவு செய்த இலக்கமும் திகதியும் :-----.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடை யாளத்தை நிரூபித்தல் வேண்டும்.

9. **பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும்** :

9.1 இப்பரீட்சைக்குரிய பாடங்களின் எண்ணிக்கை நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் எல்லா பரீட்சார்த்திகளும் இப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

9.2 ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர்கள் அடுத்து வரும் இரண்டு பரீட்சைத் தவணைகளுக்குள் நூன சித்திப் பாடத்திற்கு மாத்திரம் தோற்றி சித்திபெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றவராகக் கணிக்கப்படுவர். (இது 2011 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சை முதல் நடைமுறைப் படுத்தப்படும்.)

9.3 ஒவ்வொரு பாடத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்படும் புள்ளிகள் கீழ்க்குறிப்பிட்டவாறு தரப்படுத்தப்படும் :-

| புள்ளி மட்டம் | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0 - 34 | சித்தியின்மை | F |
| 35 - 54 | சாதாரண சித்தி | S |
| 55 - 69 | திறமைச் சித்தி | C |
| 70 - 100 | விசேட சித்தி | D |

9.4 பரீட்சை முடிவுகளை வெளியிடல்.- பரீட்சை முடிவு களைப் பற்றிய விபரங்கள் உரிய நிறுவனங்களது அதிபர்களுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- பரீட்சையில் சித்திபெறும் ஒவ்வொரு பரீட்சார்த்திக் கும் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. **விடைத்தாள் மீள்பரிசீலனை**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பஞ் செய்தால் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும், இதற்கு உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்ப தாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்திரங்களைப் பார்வையிடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கமைய நடந்து கொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ள தோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்களிருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக் கப்படும்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2013, மே மாதம் 27 ஆந் திகதி.

**இணைப்பு - 1**

**பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டமும்**

இப்பரீட்சை ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங் களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும். வினாப்பத்திரங்களின் கட்டமைப்பும், வினாக்களுக்கான புள்ளி ஒதுக்கீடும் 2004.09.10 ஆந் திகதிய 1358 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கேற்றவாறு அமைந்திருக்கும்.

*முதலாம் வினாப்பத்திரம்*

1. **அகீதாவும், ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங்களும்) அரபு மொழியும்**

1.1 அகீதா பொது விளக்கம் (அல் இலாஹிய்யாத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யாத், அஸ்ஸம்இய்யாத்)

1.2 அகீதாவின் பிரிவுகள்
- * அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
- * ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா முஃதஜிலா, ஷீஆ

1.3 தௌஹீதும், ஷிர்க்கும்
- * ஈமானும், குப்றும்
- * ரித்தத், நிபாக்
- * அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு
- * சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆனின் பயன்பாடு
- * ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
- * சட்ட மூலதாரம் என்ற வகையில் ஸுன்னாவின் பயன்பாடு
- * ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ் களின் பங்களிப்புகளும்
- * இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
- * துணை மூலாதாரம் என்ற வகையில் இஜ்மா
- * துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
- * பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்

1.4 அறபு மொழி
- * உறுப்பமைய எழுதுதல்
- * சிறு வாக்கியங்களை எழுதுதல்
- * இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அரபுச் சொற்களை எழுதுதல்
- * முக்கியமான ஸுறாக்களையும், ஆயத்துக்க ளையும், ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்.

*இரண்டாம் வினாப்பத்திரம்*

2. **அல் பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி)**

2.1 இபாதத் பற்றிய விளக்கம்
- * இபாதத்தின் பிரிவுகள்
- * தஹாரத்

2.2 நஜீஸும் அதன் வகைகளும்
- * நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
- * நீரும் அதன் வகைகளும்
- * வுழு, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்

2.3 ஸகாத்
- * முக்கியத்துவம்
- * விதி முறைகள்
- * திரட்டலும் விநியோகமும்
- * ஸகாத் மூலம் வறுமைத்தணிப்பும், செல்வப்பங்கீடும்

2.4 நோன்பு
- * முக்கியத்துவம்
- * விதிமுறைகளும் பயனும்

2.5 ஹஜ்
- * முக்கியத்துவம்
- * விதிமுறைகளும் பயனும்

2.6 ஹஜ்: நிறைவேற்றும் முறை
- * பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
- * பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாக செய்யும் ஹஜ்கள்

2.7 இஸ்லாத்தின் உணவு, உடை, உறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்

2.8 ஜிஹாத் பற்றிய விளக்கம்

2.9 குர்பானிகளும் அறுப்பு முறைகளும்

2.10 சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்

2.11 முஆமலாத் பற்றிய விளக்கம்
- * உழைப்பின் முக்கியத்துவம்
- * பிரதான கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்) ஏனைய கொடுக்கல் வாங்கல் (உ+ம்: இரவல், வாடகை)
- * வக்பு, வஸிய்யத், வராஸத் (பொதுச்சொத்து, உயில் சொத்து, வாரிசுச்சொத்து)

2.12 இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை
- * நிகாஹின் விதிமுறைகளும் பயனும்
- * குடும்ப வாழ்வு
- * கணவன் -மனைவி
- * பெற்றோர் - பிள்ளை உரிமைகளும், கடமைகளும்
- * தலாக்கும் இத்தாவும்

2.13 ஜினாயத்
- * ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

*மூன்றாம் வினாப்பத்திரம்*

3. **ஸீறாவும் தாரீகும்**

3.1 இஸ்லாத்துக்கு முந்திய அரபு நாட்டின் சமய சமூக நிலை

3.1.1நபி (ஸல்) அவர்கள்
- ● நுபுவத்திற்கு முந்திய வாழ்க்கை
  - * குடும்பம், பரம்பரை
  - * இளமைப்பருவம்
  - * நற்குணம்
  - * திருமணம்
- ● நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை
  - * நுபுவ்வத் கிடைத்தல்
  - * இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
  - * மிஃராஜ்
  - * ஹிஜ்ரத்

- மதீனா வாழ்க்கை
  - * சமூக அரசியல் செயற்பாடு
  - * தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன்படிக்கைகளும்
  - * இஸ்லாம் பூரணத்துவம் பெறல்.
- * ஸஹாபாக்களின் அந்தஸ்தும் இஸ்லாத் திற்கான அவர்களது பங்களிப்பும்
- * குலபாஉர்ராஷிதூன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
- * உமையா, அப்பாசிய ஆட்சிக்காலம்
- * பைத்துல் முகத்தஸ் - வரலாறு
- * இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
- * முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
- * பின்வருவோர் பற்றிய வரலாறு
  - * இமாம் புகாரி (ரஹ்)
  - * இமாம் ஷாபிஈ (ரஹ்)
  - * இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
  - * இமாம் அப்துல் காதி ஜீலானி (ரஹ்)
  - * இமாம் ஷாதுலி (ரஹ்)

***நான்காம் வினாப்பத்திரம்***

***4. அக்லாக் - (இஸ்லாமிய ஒழுக்கவியல்)***

*4.1 அக்லாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்*

- * அக்லாக் பற்றிய விளக்கம்
- * ஈமானுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
- * அக்லாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
- * உளத்தூய்மை (இஃலாஸ்)

*4.2 தக்வா*

- * வரஉ, ஸுஹ்த்
- * முராகபா, முஹாஸபா
- * ஷவ்க் (இறையன்பு)

*4.3 ஈகை*

- * தியாகம்
- * நன்றியுணர்வு
- * பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக் கொடுத்தல் - மன்னித்தல்
- * பணிவு
- * நேரம் பேணுதல்
- * அவையவங்களைப் பேணுதல்-நாவு, கண், காது, பாலுறுப்பு
- * பிறரை மதித்தல்
- * நீதியும் நேர்மையும்
- * இளைஞர்-யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப் பண்புகள்
- * ஏனைய சமயத்தவர்களுடன் இணங்கி வாழ்தல்

*4.4 இஸ்லாமிய நீதிமுறை*

***இணைப்பு - 2***

***உரிய மாவட்டங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்க எதிர்பார்க்கும் நகரங்களும் அவற்றின் இலக்கங்களும்***

| *நகரம்* | *நகர இல.* | *மாவட்ட இல.* | *நகரம்* | *நகர இல.* | *மாவட்ட இல.* |
|---|---|---|---|---|---|
| **கொழும்பு மாவட்டம்** | | 01 | **கம்பஹா மாவட்டம்** | | 02 |
| கொழும்பு (மத்தி) | 01 | | திஹாரிய | 03 | |
| பம்பலப்பிட்டி | 02 | | மாபோலை | 04 | |
| | | | மல்வானை | 05 | |
| | | | நீர்கொழும்பு | 06 | |
| | | | கல்எலிய | 07 | |
| **களுத்துறை மாவட்டம்** | | 03 | **காலி மாவட்டம்** | | 04 |
| பாணந்துறை | 08 | | காலி | 11 | |
| களுத்துறை | 09 | | | | |
| அழுத்கம | 10 | | | | |
| **மாத்தறை மாவட்டம்** | | 05 | **தங்கல்லை மாவட்டம்** | | 06 |
| வெலிகமை | 12 | | ஹம்பாந்தோட்டை | 14 | |
| மாத்தறை | 13 | | | | |
| **கேகாலை மாவட்டம்** | | 07 | **குருநாகல் மாவட்டம்** | | 08 |
| மாவனல்லை | 15 | | குளியாபிட்டி | 18 | |
| வரகாபொலை | 16 | | குருநாகல் | 19 | |

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. | நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|---|---|---|
| கன்னத்தோட்டை | 17 | | மெல்சிறிபுர | 20 | |
| | | | பொல்கஹவெல | 21 | |
| | | | கெகுனாகொல்ல | 22 | |
| **புத்தளம் மாவட்டம்** | | 09 | **அநுராதபுர மாவட்டம்** | | 10 |
| நுரைச்சோலை | 23 | | அநுராதபுரம் | 26 | |
| புத்தளம் | 24 | | கெக்கிராவை | 27 | |
| சிலாபம் | 25 | | கலென்பிந்துனுவெவ | 28 | |
| **பொலன்னறுவை மாவட்டம்** | | 11 | **மாத்தளை மாவட்டம்** | | 12 |
| கதுறுவெல | 29 | | மாத்தளை | 30 | |
| **கண்டி மாவட்டம்** | | 13 | **நுவரெலியா மாவட்டம்** | | 14 |
| கண்டி | 31 | | நுவரெலியா | 35 | |
| நாவலப்பிட்டி | 32 | | | | |
| தெல்தொட்டை | 33 | | | | |
| கெலி ஓயா | 34 | | | | |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | 15 | **பதுளை மாவட்டம்** | | 16 |
| எஹலியகொடை | 36 | | பதுளை | 38 | |
| பலாங்கொடை | 37 | | வெலிமடை | 39 | |
| **மொனராகலை மாவட்டம்** | | 17 | **அம்பாறை மாவட்டம்** | | 18 |
| பிபிலை | 40 | | அக்கரைப்பற்று | 31 | |
| | | | பொத்துவில் | 42 | |
| | | | கல்முனை | 43 | |
| | | | சம்மாந்துறை | 44 | |
| | | | இறக்காமம் | 45 | |
| | | | நிந்தவூர் | 46 | |
| | | | ஒலுவில் | 47 | |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | 19 | **திருகோணமலை மாவட்டம்** | | 20 |
| காத்தான்குடி | 48 | | மூதூர் | 51 | |
| ஏறாவூர் | 49 | | கிண்ணியா | 52 | |
| வாழைச்சேனை | 50 | | திருகோணமலை | 53 | |
| **வவுனியா மாவட்டம்** | | 21 | **மன்னார் மாவட்டம்** | | 22 |
| வவுனியா | 54 | | மன்னார் | 55 | |
| **முல்லைத்தீவு மாவட்டம்** | | 23 | **கிளிநொச்சி மாவட்டம்** | | 24 |
| முல்லைத்தீவு | 56 | | கிளிநொச்சி | 57 | |
| **யாழ்ப்பாண மாவட்டம்** | | 25 | | | |
| யாழ்ப்பாணம் | 58 | | | | |

**காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு**

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

**காணி உபயோகத் திட்டமிடல் உதவி அலுவலர்களுக்கான II ஆவது தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சை - 2013**

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் காணி உபயோகத் திட்டமிடல் உதவி அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கொழும்பில் 2013, செத்தெம்பர் மாதம் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நடைமுறை மற்றும் விடய சிபாரிசுகள்.**- இவ்வினைத் திறமைகாண் தடைதாண்டற் பரீட்சை இரண்டு வினாத்தாள்களை யுடையதாக இருக்கும் :

1 ஆவது வினாத்தாள்.- முகாமைத்துவம் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான அடிப்படைகள் (காலம் : 3 மணித்தியாலங்கள்)

2 ஆவது வினாத்தாள்.- காணி உபயோக முகாமைத்துவ நுணுக்கங்கள் (காலம் : 3 மணித்தியாலங்கள்)

1 ஆவது மற்றும் 2 ஆவது வினாத்தாள்கள் இரண்டிலும் 08 கேள்விகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒரு வினாத்தாளில் 05 கேள்விகள் வீதம் இரண்டு வினாத்தாள்களிலும் பதில் வழங்குவதை எதிர்பார்க்கின்றோம். அனைத்து கேள்வி களுக்கும் சமனான புள்ளிகள் வழங்கப்படும். சித்தியடையும் புள்ளிகளின் மட்டம் 40% ஆகும்.

1 ஆவது வினாத்தாள்.- முகாமைத்துவம் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான அடிப்படைகள் :

(அ) முகாமைத்துவம் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான அடிப்படைகள் மற்றும் அவற்றை உபயோகித்து அரசாங்க நிறுவனங்களுக்குள் பிரச்சினைகளைத் தீர்த்தல்

(ஆ) நிறுவன முகாமைத்துவத்தின் ஊடாக வினைத்திறன் மற்றும் வினைத்திறனை உயர்த்துதல்

(இ) பங்குபற்றல்சார் முகாமைத்துவம்

(ஈ) தலைமைத்துவம் மற்றும் ஊக்கப்படுத்தல்

2 ஆவது வினாத்தாள்.- காணி உபயோக முகாமைத்துவ நுணுக்கங்கள் :

(அ) இலங்கையில் காணி உபயோகம், திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக பொறுப்புடைய நிறுவனங்களின் தொழிற்பாடுகள்

(ஆ) இலங்கையில் பல்வேறு மட்டத்திலான காணி உபயோக வழிமுறைகள் மற்றும் தேசிய காணி உபயோகக் கொள்கைகள்

(இ) இலங்கையில் காணி உபயோகத்தை திட்டமிடுதல், அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பான நடைமுறைச் சட்டதிட்டங்கள்

(ஈ) காணி உபயோகம் மற்றும் சூழல் ரீதியான தாக்கங்கள் தொடர்பான திறனாய்வு

(உ) காணி உபயோகத் திட்டமிடலின்போது மக்களின் பங்களிப்பு

3. இந்தப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் மட்டும் நடத்தப்படும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகளால் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பப் படிவத்தை "ஏ4" அளவு கடதாசி ஒன்றில் இரு பக்கமும் தயாரிக்க வேண்டும். பரீட்சார்த்தி விண்ணப்பப்படிவத்தை பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் பூர்த்திசெய்ய வேண்டும். கோரும் மொழி பின்னர் மாற்றப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இல. 1.0 இருந்து 3.0 வரை முதற்பக்கத்திலும், மீதியை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரிக்கப்பட வேண்டியதோடு அதற்குரிய தகவல்களை தனது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் உள்ளடக்கப்பட வேண்டும். அவ்வாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பரீட்சை அறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பது தொடர்பாக கவனிக்க வேண்டும். அவ்வாறு இல்லாத அல்லது முழுமையல்லாத தகவல்களை குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி மற்றும் பணி இடம், பரீட்சை தொடர்பான அனைத்து செயற்பாடுகளுக்காகவும் உரியதாவதோடு விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட்ட பின்பு அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எது தொடர்பாகவும் பரீட்சிக்கப்பட மாட்டாது.

4. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட உடனேயே அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிக்கையொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாள் கடந்தும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையெனில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உமது கைவசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் உறுதிசெய்யப்பட்ட நிழல் பிரதியொன்றையும், பதிவுசெய்த பற்றுச்சீட்டையும், கொழும்பிற்கு வெளியே எனில் அனுமதி அட்டையை அனுப்பிவைப்பதற்கு பெக்ஸ் இலக்கமொன்றையும் குறிக்கப்பட்ட உமது வேண்டுகோள் கடிதத்தையும் கைவசம் வைத்துக் கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு விண்ணப்பிப்பது மிகவும் பயனுடையதாக இருக்கும்.

5. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் அனைத்து விடயங்களிலும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரி திருப்தியடையக்கூடியவாறு தமது சுய தரவுகளை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு (பாஸ்போர்ட் அனுமதிப்பத்திரம்).

விண்ணப்பப்படிவங்கள் 2013, யூன் மாதம் 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளருக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்குறிப் பிடப்படும் முகவரிக்கு மா வட்ட காணி உபயோகக் கொள்கைத்

திட்டமிடல் அலுவலரின் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.-

பணிப்பாளர்,
காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்,
இல. 31, பாதிபா வீதி,
நாரஹேன்பிட்ட,
கொழும்பு 05.

6. இந்தப் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை நுழைவு அனுமதி அட்டை விநியோகிப்பது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளைப் பூர்த்திசெய்ததாகக் கருத முடியாது. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதி முடிவாகும்.

7. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பப்படிவம் அனுப்பியுள்ள அனைவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டை விநியோகிக்கப்படுவதோடு பரீட்சையில் தோற்றுவதற்கு அவர்களுக்கு அலுவலக பொறுப்பாளரால் கடமை விடுமுறை வழங்கப்படும். பரீட்சை தொடங்கும் நாள் தமது கையொப்பத்தை உறுதிசெய்யப்பட்ட அனுமதி அட்டையை மண்டப பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

8. நடைமுறையில் இருக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கு அமைய இப்பரீட்சை நடாத்தப்படுவதோடு இப்பிரமாணங்களுக்கு உட்படாத ஏதாவதொரு விடயம் இருப்பின் அது தொடர்பாக காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் பணிப்பாளரின் தீர்மானத்தின்படி செயற்படுத்தப்படும்.

பி. எம். சாந்தி பிரனாந்து,
பணிப்பாளர்.

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்,
இல. 31, பாதிபா வீதி,
நாரஹேன்பிட்ட,
கொழும்பு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பரீட்சை எண் : ☐

**காணி உபயோகத் திட்டமிடல் உதவி அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை - 2013**

உரிய மாவட்டம் : ☐

பரீட்சைக்குத் தோற்றும் மொழி : ☐
சிங்களம் - 2
தமிழ் - 3
(குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

1. பெயர் :
   1.1 முதலெழுத்தைக் கடைசியில் குறிப்பிட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதா. SILVA. A.B. :----.
   1.2 முதலெழுத்துக்களில் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   1.3 முழுப்பெயர் (தமிழில்/சிங்களத்தில்) :----.

2. அனுமதி அட்டையை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   2.1 கடமை முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   2.2 நிரந்தர முகவரி (தமிழில்/சிங்களத்தில்) :----.

3.
   3.1 பால் : ☐
   பெண் - 1, ஆண் - 0
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)
   3.2 குடியியல் தன்மை : ☐
   திருமணம் செய்யாதவர் - 1, திருமணம் செய்தவர் - 2
   3.3 பிறந்த திகதி :
   ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐
   3.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   ☐☐☐☐☐☐☐☐☐☐

4. பரீட்சையில் தோற்றும் பாடங்கள் :
   முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு தொடர்பான அடிப்படைகள் - 1
   காணி உபயோக முகாமைத்துவ நுணுக்கங்கள் - 2

5. பரீட்சைக்கு தோற்றுவது முதலாவது தடவையாகவா ? :----.
6. தற்போது வகிக்கும் பதவி மற்றும் வகுப்பு :----.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும், கோரியுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையவர் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
சமர்ப்பிக்கிறேன்.

மேற்குறிப்பிடப்படும் பரீட்சார்த்திக்கு (ஆண்/பெண்) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி உண்டென்றும், அவர் குறிக்கப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகுதியுண் டென்றும் உறுதிசெய்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி நிலை.

திகதி :----.

6-342

## திருத்தம்

### கல்வி அமைச்சு

மே மாதம் 10 ஆந் திகதிய (வெள்ளிக்கிழமை) 1810 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியாகிய கல்வி அமைச்சின் உதவி முகாமையாளர் - தொழில்நுட்பம் அல்லாத வகுப்பு 02 தரம் II இல் பதவியில் உள்ளோருக்கான 2 ஆவது தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சை அறிவித்தல் தொடர்பான திருத்தம் :

மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் :

1. காரியாலய முறை :

தாபன விதிக்கோவை II ஆம் பகுதியில் அத்தியாயம் XI, VII பற்றிய சாதாரண விளக்கம்.

திருத்தம் செய்யப்பட வேண்டிய விதம் :

தாபன விதிக்கோவை II ஆம் பகுதியில் அத்தியாயம் XLVII பற்றிய சாதாரண விளக்கம்.

பீ. எச். ஏ. விமலவீர,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
கல்விச் செயலாளருக்காக.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை.
2013.05.27.

6-144

---

## திருத்தம்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்வதற்காக 1808 ஆம் இலக்க 2013.04.26 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட பரீட்சை அறிவித்தலில் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன :

### இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012 (2013)

4. (ஆ) (ii) வாசகத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆங்கில பாடமும் உள்ளடக்கப்படும் சகல தகைமைகளையும் 2013.05.27 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்திருக்க வேண்டியதுடன் அவ்வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படும். விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2013.06.28 ஆந் திகதியாகும்.

II (x) வாசகத்தில் III "செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்" என்ற அறிவித்தல் நீக்கப்படுகின்றது.

### சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012 (2013)

9. (x) வாசகத்தில் III "செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்" என்ற அறிவித்தல் நீக்கப்படுகின்றது. சகல தகைமைகளையும் 2013.05.27 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்திருக்க வேண்டும். விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2013.06.28 ஆந் திகதியாகும்.

### இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012 (2013)

9. (x) வாசகத்தில் III "செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்" என்ற அறிவித்தல் நீக்கப்படுகின்றது. சகல தகைமைகளையும் 2013.05.27 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்திருக்க வேண்டும். விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2013.06.28 ஆந் திகதியாகும்.

6-416

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.